| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 11.06.2026 | |
| CC No. 279/2025 | |
| சாட்சி :PW2 | |
| பெயர் : திரு. ஜான்லாரன்ஸ் | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு.வேளாங்கண்ணி | தொழில் : TNSTC |
| கிராமம் : தெற்குஅஞ்சல்காரன்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 53/2026 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---------------------------------------------------------------

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் பாதுகாவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். மேற்படி புகார் வாக்குமூலத்தை நான்தான் கொடுத்தேன். ஆஜர் எதிரிகள் எனது சித்தப்பா மகன்கள் ஆவார். 23.02.2025 அன்று எனது சொந்தமான நிலத்தில் விவசாயம் செய்வதற்காக டிராக்டரை உழுவதற்கு சென்றேன். உழுவு ஓட்டி முடிந்த பின்பு அன்று சுமார் 01.30 மணியளவில் ஆஜர் எதிரிகள் இருவரும் அங்கு வந்தார்கள். நான் சித்தப்பா பசங்கள் என்பதால் நான் டிராக்டரை நிறுத்திவிட்டு அவர்களை வாங்க தம்பி என்றேன். அதற்கு அவர்கள் கொத்தா, கொம்மா என்று தகாத கெட்ட வார்த்தையால் திட்டி, எனது அப்பாவை அசிங்கப்படுத்திவிட்டு என்னை தம்பி என்று கூப்பிடுகிறாயா என்று திட்டி போக்ஸ்கோ வரப்பு அருகே நின்றுகொண்டு கையால் என்னை தாக்கினார். சார்லஸ் டிராக்டர் மீது ஏறிக்கொண்டு காலால் எட்டி உதைத்தார். செருப்பால் கண்ணத்திலும், தலையிலும் தாக்கினார். என்னை கீழே தள்ளி மிதித்துவிட்டார்கள். எனக்கு கண்ணத்தில் வீக்க காயம் ஏற்பட்டது. எதிரிகள் உன்னை எப்போது இருந்தாலும் நாங்கள் தான் கொல்வோம் என்று கொலை மிரட்டல் விடுத்தார்கள். அங்கு ஆடு, மாடு மேய்ந்து கொண்டிருந்த விஜயலெட்சுமி, சூசை மற்றும் பலர் உள்ளிட்டோர் தகராறை விலக்கிவிட்டார்கள். தகவலறிந்து எனது மைத்துனர் வின்சென்ட் , ஜான்ஜோசப் ஆகியோர்கள் மூலம் ஏகேவி ஆம்புலன்ஸ் மூலம் மணப்பாறை அரசு

மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய போதி வாய்ப்பு அளிக்கப்பட்டும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

Taken over by me in open court read over
to the witness and admitted by the witness
to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.

| DEPOSITION OF WITNESS<br>(Chapter XXIII code of Criminal Procedure)<br>IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MANAPPARAI<br>Present : Thiru.R.Ashokumar, B.com.,B.L.<br>Judicial Magistrate, Manapparai | |
|---|---|
| Date: 11.06.2026 | |
| CC No. 279/2025 | |
| சாட்சி :PW3 | |
| பெயர் : திருமதி. விஜயலெட்சுமி | ஜாதி : |
| த/பெ/க/பெ. : திரு.பாலசுப்பிரமணி | தொழில் : கூலி |
| கிராமம் : ஊத்துப்பட்டி | சமயம் : |
| தாலுக்கா : | வயது : 38/2026 |
| ( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர்) | |

---

<u>**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**</u>

1. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். நான் 07 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.2 ஜான்லாரன்ஸை என்பவரையும், ஆஜர் எதிரிகளையும் சம்பவத்தன்று தகராறு நடைபெற்ற போது பார்த்தேன். 23.02.2025 அன்று ஊத்துப்பட்டியிலிருந்து கொஞ்சு தூரம் தள்ளி உள்ள ஒரு நிலத்தில் ஆடு மேய்த்து கொண்டிருந்தேன். தகராறு நடந்த நிலத்தின் அருகே நான் ஆடு மேய்த்து கொண்டிருந்த போது அந்த நிலத்துகாரர் லாரன்ஸ் டிராக்டரில் உழுவு ஓட்டி கொண்டிருந்தார். சத்தம் கேட்டு நான் அங்கு சென்ற போது ஆஜர் எதிரிகள் இருவரும் லாரன்ஸ் சட்டையை பிடித்து அடித்துக்கொண்டிருந்தார்கள், எதிரிகள் செருப்பால் அடித்து கெட்ட வார்த்தையால் திட்டினார்கள். அவரை கீழே போட்டு மிதித்தார்கள், லாரன்ஸ் என்னை காப்பாற்றுங்கள் என்று கத்தினார், அவரை நானும், அங்கு இருந்த அக்கம், பக்கத்தினரும் மீட்டு தகராறை விலக்கிவிட்டோம். அவருக்கு வலியாக இருந்தது. கண் தெரியவில்லை வலியிருப்பதாக கூறினார். தகவலறிந்து லாரன்ஸின் மைத்துனர் வந்து ஏகேவி ஆம்புலன்ஸ் மூலம் மணப்பாறை அரசு மருத்துவமனையில் கெண்டு சென்றார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

( எதிரிகள் ஆஜர் , வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை செய்ய போதி வாய்ப்பு அளிக்கப்பட்டும் எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை. )

Taken over by me in open court read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-R.Ashokumar,B.com.,B.L.,
Judicial Magistrate,
Manapparai.